உள்ளே......


பக்கம்

1. செட்டிக்குறிச்சி - ஓர் ஆய்வு ... 1
—மா. சந்திரமூர்த்தி

2. கடம்பூரின் தொன்மை வரலாறு ... 12
—தே. கோபாலன்

3. வண்ணக்கன் - ஓர் ஆய்வு ... 22
—சு. இராசகோபால்

4. A COIN OF SUNDARA PANDYA ... 26
—A. Padmavathy

5. பச்சிபிலி பட்டக்காரர் செப்பேடு ... 30
—சொ. சாந்தலிங்கம்

6. சின்னத்தக்கை நடுகல் ... 35
—மா. கலைவாணன்

# செட்டிக்குறிச்சி ஓர் ஆய்வு

**மா. சந்திரமூர்த்தி,** எம்.ஏ.,
பதிவு அலுவலர், சென்னை.

**அமைவு**

செட்டிக்குறிச்சி எனப்பெயர் கொண்டு விளங்கும் இவ்வூர் இராமநாதபுர மாவட்டம், அருப்புக்கோட்டைக்குத் தெற்கே தூத்துக்குடி நெடுஞ்சாலையிலிருந்து மேற்கே *1* கி.மீ. தொலைவில் உள்ளது.

**ஊரும் பேரும்**

விஜயநகரர் காலத்தில் இப்பகுதியில் குடியேறிய கவரை (கௌரவ) செட்டியார்கள் தொடர்பால் இவ்வூர் செட்டிக்குறிச்சி என அழைக்கப்படுகிறது. இன்றும் இப்பகுதியில் செட்டியார்கள் குடும்பம் அதிகம் உள்ளன. இவ்வூருக்கு நல்லூர் என்ற மற்றொரு பெயரும் உண்டு.

**தொன்மை**

கி. பி. *12-13*ம் நூற்றாண்டு முதல் இவ்வூர் சிறப்புடன் விளங்கி வந்துள்ளது. இடைக்காலப் பாண்டியர்களுள் மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் புகழ் மிகுந்த நகராக விளங்கியது. தொடர்ந்து இவ்வூர் விஜயநகர மன்னர்கள், நாயக்கர்கள், ஜமீன்தார்கள் காலத்திலும் சிறந்து விளங்கி வந்துள்ளது.

**அரண்மனைமேடு**

இவ்வூரில் பண்டைய அரசர்கள் வாழ்ந்த அரண்மனைப் பகுதிகள் சிதறிக் காணக்கிடக்கின்றன. இவ்வூருக்கு நடுவே உள்ள அந்த பகுதிகள் அரண்மனைமேடு என்ற பெயரில் அழைக்கப்பட்டு வருகிறது. சுமார் *1"* கனத்தில் செங்கல்லை பயன்படுத்தி உறுதியான காரையைக் கொண்டு பூசிய கட்டடப்பகுதிகள் இன்றும் இப்பகுதியில் காணலாம்.

### செவிவழிச்செய்தி

இப்பகுதியில் சில நூற்றாண்டுகளுக்கு முன் சாரங்கராஜா என்னும் அரசன் ஆண்டு வந்ததாகக் கூறப்படுகிறது. இம்மன்னனைப் பற்றியும், அவனது தந்தையைப் பற்றியும் ஏராளமானச் செவிவழிச் செய்திகள் இப்பகுதியில் நிலவி வருகின்றன. அவற்றில் ஒன்று: இப்பகுதியில் ஆட்சி செய்த அரசனின் மூத்த தாரத்து மகன் சாரங்கராஜா. இவனது தந்தை இரண்டாம் தாரமாக மற்றொரு இளவரசியை மணந்துக் கொண்டான். இளவரசியோ மன்னனின் மகனான சாரங்கராஜாவை விரும்பினாள். இதனை சாரங்கராஜா மறுக்கவே அரசி இவன் மீது வெறுப்பு கொண்டாள். அரசனிடம் இளவரசன் தன்னை விரும்பியதாகப் பழியும் சுமத்தினாள். அரசன் கோபங்கொண்டு தன் மகன் சாரங்கராஜாவை மாறுகால், மாறு கை வாங்க உத்திரவிட்டான். அரசு ஆணைக்கிணங்க சாரங்கராஜாவை ஊருக்குக் கிழக்கேக் கொண்டு சென்று, பாறையின் கீழ் மண்டியிடச் செய்து கொலை செய்ததாக செவிவழிச் செய்தி கூறுகிறது. இதன் விளைவாக ஊரின் கிழக்கே 1 கி.மீ தொலைவில் உள்ள பாறை இன்றும் ''சாரங்கராஜா வெட்டுப்பாறை'' என்ற பெயரில் அழைக்கப் பட்டு வருகிறது.

இம்மன்னன் இரவு நேரங்களில் குதிரைப்படைகளுடன் தீவட்டி வெளிச்சத்தில் ஊர்வலமாக வருவதாக கிராம மக்கள் நம்புகின்றனர். இவ்வூர் சிவன் கோயிலில் நடுநிசியில் லிங்கபூஜை செய்யும் மணி ஓசைக்கேட்பதாகவும் கூறுகின்றனர்.

### கோயில்கள்

இவ்வூரில் திருவெட்டிச்சுரர் கோயில், வரதராஜப்பெருமாள் கோயில், உய்யவந்த அம்மன் கோயில், சங்கையம்மன் கோயில், பெத்தண்ணசாமிக் கோயில், கம்பப்பெருமாள் கோயில், காமாட்சியம்மன் கோயில் ஆகிய ஏழு கோயில்கள் வழிபாட்டில் உள்ளன. அவற்றில் சிறப்பானவற்றைக் கீழே காண்போம்.

### திருவெட்டிச்சுரர் ஆலயம்

இச்சிவாலயம் ஊரின் வடகிழக்கே அமைந்துள்ளது. வாயில் கிழக்கு பார்த்தது. கோயில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், முகமண்டபம், திருச்சுற்று மதில் ஆகிய பகுதிகளைக்

கொண்டு விளங்குகிறது. கருவறை சதுர வடிவமானது. அதன் முன் தூண்கள் ஏதுமின்றி எளிமையான அர்த்த மண்டபம் செவ்வக வடிவத்தில் கீழ் மேலாக நீண்டுள்ளது. அதனை அடுத்துள்ள மகா மண்டபத்தை வரிசைக்கு மூன்று தூண்கள் வீதம் இருவரிசைகளில் ஆறு தூண்கள் தாங்கி நிற்கின்றன. இத்தூண்கள் ஒவ்வொன்றும் மேலும், கீழும், நடுவிலும் சதுரமாகவும் இடையில் எண்பட்டை யாகவும் அமைந்துள்ளன. மேல் பகுதியில் எளிமையான போதிகை கள் காணப்படுகின்றன.

**அம்மன்**

மகாமண்டபத்தின் வடபுறத்தில் அம்மன் சன்னதியைக் காணலாம். இது தென்திசை நோக்கி அமைந்துள்ளது. கருவறை, அர்த்த மண்டபம் ஆகிய பகுதிகளுடன் விளங்குகிறது. கருவறையின் நடுவே திரிபங்கத்தில் நின்ற நிலையில் உமை அன்னை காட்டப் பட்டுள்ளாள். அன்னையின் வலது கையில் நிலோற்பலம் உள்ளது. இடது கை லோல முத்திரையில் அமைந்துள்ளது. தலை யில் கரண்ட மகுடமும், காதுகளில் குழையும், கழுத்தில் அணியும், இடையில் ஆடையும் அணிந்துள்ளாள்.

**பிற தெய்வங்கள்**

மகாமண்டபத்தின் வடமேற்கு மூலையில் சுப்ரமணியர், வள்ளி தெய்வயானை சமேதராக காட்டப்பட்டுள்ளார். மற்றும் ஆட வல்லான், சிவகாமி, மணிவாசகர் ஆகியோரின் சிலைகளும் உள்ளன. தென் மேற்கு மூலையில் இரண்டு விநாயகர் சிலைகள் உள்ளன. ஒன்று பெரியது; மற்றொன்று சிறியது.

அடுத்து வடகிழக்கு மூலையில் ஆலமர்செல்வன், சண்டேசர், பைரவர் ஆகிய சிலைகள் உள்ளன. இவற்றில் சண்டேசர் மட்டும் பழமை வாய்ந்தது. ஏனைய தெய்வச் சிலைகள் அனைத்தும் கி. பி. 18—19ஆம் நூற்றாண்டில் செய்து அளிக்கப்பட்டவை. இவற்றை செய்தளித்தவரின் சிலையை அருகிலே காணலாம். தலையிலும், கழுத்திலும், தோளிலும் மார்பிலும் அக்கமாலை அணிந்து அஞ்சலித்து நிற்கும் அடியாராகக் காட்டப்பட்டுள்ளார். சுமார் 3·5 அடி உயரமுள்ள இவ்வுருவம் வடக்கு நோக்கி அமைந்துள்ளது.

**சண்டிகேசர்**

இடது காலை மடித்து வலது காலை தொங்கவிட்டு இருக் கையில் அமர்ந்த நிலையில் காட்டப்பட்டுள்ளார். வலது கை மழு ஏந்தியும், இடது கை தொடை மீதும் அமைந்துள்ளது. தலையில் ஜடாமகுடமும், தோள்களில் வாகுமாலையும், வயிற்றில் உதரபந்த மும், மார்பில் புரிநூலும், அரையில் ஆடையும், காலில் கழலும் பாத சரமும் அணி செய்கின்றன. இச்சிலை சண்டிகேசர் சன்னதிக்கு உரியது, கி. பி. 12-13ஆம் நூற்றாண்டு கலைப்படைப்பு.

ஆலயத்தின் அதிட்டான வரிகள் எளிமையாக அமைந்து காணப் படுகின்றன. கருவறையின் புறச்சுவரில் மூன்று தேவகோட்டங்கள் உள்ளன. அவை சிலைகள் வைக்க முடியாதவகையில் பொய்மை கோட்டங்களாக (False Devakostom) அமைக்கப்பட்டுள்ளன. கரு வறைக்கும் அர்த்த மண்டபத்திற்கும் இடையே கும்பபஞ்சரங்கள் எளிமையாகக் காட்டப்பட்டுள்ளன. சுவற்றின் மேல் பிரஸ்தரம் (கூரை) அமைந்துள்ளது. இதில் பூதவரி, கொடுங்கை, யாளிவரி ஆகிய மூன்று பகுதிகளில் யாளி வரி மட்டும் வனப்புடன் அமைந்துள்ளது இதன் மீதுள்ள விமானத்தளங்கள் யாவும் முற்றிலும் சிதைந்து விட்டன. அவ்வாறு வாயிலை அலங்கரித்து நிற்கும் கோபுரமும் காணப்படவில்லை. இக்கோயில் கி.பி.13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இடைக்கால பாண்டியர் கலை மரபில் அமைந்துள்ளது.

வாயில் முன்னுள்ள ரதியின் சிற்பம் உருவில் சிறியது. வனப்பு மிக்கது. கி. பி. 12, 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

**கல்வெட்டுக்கள்**

இக்கோயிலில் இரண்டு கல்வெட்டுக்கள் உள்ளன. ஒன்று மேற் புறத்தில் குமுதப்படையிலும் மற்றொன்று வெளிப்புறத் தெற்குச் சுவரிலும் வெட்டப்பட்டுள்ளன. குமுதப்படையில் உள்ள கல் வெட்டில் எழுத்துக்கள் உருத்தெரியாது தேய்ந்துவிட்டன. இரண்டா வது கல்வெட்டு சோனாடு கொண்டருளிய ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவரின் 4வது ஆட்சியாண்டு கல்வெட்டு. இதில் இறைவன் திருவெட்டிச்சுரன் எனக் குறிக்கப்படுகிறார். கல்வெட்டு பாடல் வடிவில் அமைந்துள்ளது. கல்வெட்டில் மேல் பகுதி மட்டும்

தெளிவாகத் தெரிகின்றது. கல்வெட்டில் சக ஆண்டு ஆயிரத்து நூற்று நாற்பத்திரண்டு எனக் குறிக்கப்பட்டுள்ளது. இது சோனாடு கொண்டருளிய சுந்தரபாண்டிய தேவரின் 4-வது ஆட்சியாண்டுக்குச் சமமானது. இக்கல்வெட்டில் அரசனின் ஆட்சியாண்டும், சக ஆண்டும் குறிக்கப்பட்டுள்ளதால் கல்வெட்டின் காலம் கி.பி. 1220 என உறுதிப் படுகிறது. திருவெட்டிச்சுரர் ஆலயமும் கி.பி.13-ஆம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியில் மாறவர்மன் சுந்தரபாண்டியதேவரால் கட்டப் பட்டிருக்க வேண்டும் எனக் கூறலாம். இதற்கு கோயில் கட்டடக் கலைப்பாணியும் துணை செய்கிறது.

கல்வெட்டு

1. ஸ்ரீ கோமாற பந்மரான திரிபுவன
2. சக்கரவத்திகள் ஸ்ரீ சோனாடு
3. கொண்டருளிய ஸ்ரீ சுந்தர
4. பாண்டிய தேவர்க்குயாண்டு
5. ச . . . . . . . . . சிரீபாதக . . . . சகர
6. யாண்டாயிரத்து நூற்றிற் . . .
7. செட்டிய நூற்பத்திரண்டிற்

முகமண்டபம்

முகமண்டபத்தை ஆறு தூண்கள் தாங்கி நிற்கின்றன. முன் வரிசையில் உள்ள இரண்டாவது தூணில் இரு ஆண் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. ஒன்று அரசன், மற்றொன்று அமைச்சன், முதல் உருவம் தலையில் முடிந்த கொண்டையும், முகத்தில் மீசையும் தாடியும் தரித்து காது, கழுத்து, தோள்களில் அழகிய அக்கமாலை அணிந்து, அரையில் ஆடை தரித்து கூப்பிய கரங் களுடன் காணப்படுகிறது. சுமார் 2' உயரத்தில் பக்தி பெருக்கோடு காணப்படும் இவ்வுருவத்தை ஊரார் "பாண்டியன்" எனக் கூறுவர். இதே தூணில் மேற்கு பார்த்த நிலையில் மற்றொரு உருவம் காணப்படுகிறது. தாடியும், மீசையும், இடது புறம் சாய்ந்த கொண்டையும் பூண்டு விளங்கும் இவ்வுருவம் சுமார் 1' உயரம் உடையது. இடது தோளில் நீண்ட வாளை தலைகீழாகக் கொண்டு அஞ்சலித்து நிற்கிறது. இவ்விரு சிற்பங்களும் சுந்தரபாண்டியனும், அவனது அமைச்சனுமாக இருக்கலாம்.

**வரதராஜப் பெருமாள் கோயில்**

ஊரின் மேற்கே அமைந்துள்ளது. நாயக்கர் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டது. தற்போது கருவறையில் வழிபாட்டில் உள்ள வரதராஜப்பெருமாள் மண்ணிலிருந்து வெளிப்பட்டதாகவும் பின்னர் இப்பகுதி மக்களால் கோயில் திருப்பணி செய்விக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இவ்வூரில் உள்ள வா.றா வகையறாக் குடும்பத்தினர் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியில் பல திருப்பணிகளை செய்துள்ளனர். இதனை அக்குடும்பத்தாரிடம் தற்போது உள்ள கையெழுத்துப் பிரதி தெளிவாகக் குறிக்கிறது.

## கைப்பிரதி

*1911 வருஷம் ஜூலை மாதம் 25 தேதி*

*விரோதி கிருது வருஷம் ஆடி மாதம் 10 தேதி*

*3. செட்டிக்குறிச்சி கிராமத்தில் ஊருக்கு மேல்புரம் இருக்கிற வரதராஜப் பெருமாள் கோவிலில் இதற்கு ரொம்ப காலத்திற்கு முன் நம்மள் சொந்த அய்வேசு பண்டிலிருந்து ரூ. 500-0-0 ரூபாய் வரை சிலவு செய்து 10 கால் மண்டபம் ஒன்று கட்டி முடித்து கும்பாபிஷேகம் சம்ரோக்ஷனை செய் முதலியது நடத்தியிருக்கிறோம்.*

*4. ஷெ கிராமத்தில் ஊருக்கு வடபுரம் மிதனடியில் கண்டிருக்கிற 1வது ஷெடியூல் லெக்க சொத்தில் தென்புரம் கன்னி மூலையில் நம்மள் சொந்த அய்வேசு பண்டிலிருந்து ரூபாய் 800-0-0 வரை சிலவு செய்து முன்னமே ராமானுஜ கூடமென்னும் ஒரு கட்டிடம் கட்டி முடிந்து ஷெ கட்டிடத்தை சேர்ந்தயிடத்தில் ரூ. 300-0-0 வரை சிலவு செய்து கிணறு வெட்டி அதற்கு கல் கட்டிடமும் கட்டி முடித்து அதைச் சேர்ந்த நிலத்தில் நந்தவனமும் தோப்பும் உண்டு பண்ணியிருக்கிறோம். . . . . . . . . . . . . . . . . . . . . மேலும் எங்கள் சொந்த ஐவேஸ் பண்டில் இருந்து 108 திருவாச்சி தீபம் அடங்கியது பித்தாளையில் வெங்கலம் செய்து வைத்து இருக்கிறோம். மேலும் நாகர்கோவில் பிரதிஸ்டையும் தனி தனியாக 2 மண்டங்களும் திறந்த வெளியில் 2 மரத்தடியில் அமைத்து இருக்கிறோம். இது அனைத்தும் வா. ராமவிலாசத்தார் செய்து முடித்துயிருக்கிறார்கள்.*

## உய்யவந்த அம்மன் கோயில்

இக்கோயில் ஊரின் வடக்கே அமைந்துள்ளது. அம்மன் அமைந்துள்ள கருவறை சதுரவடிவானது அதன் முன்பு இரண்டு தூண்கள் தாங்கி நிற்கும் முகமண்டபம் அமைந்துள்ளது. முகமண்டபத் தூண்களில் இக்கோயிலைக் கட்டுவித்தவரின் உருவம் அர்த்த சித்திரமாக வடிக்கப்பட்டுள்ளது. அருகே அடியாரின் துணைவியாரும் கூப்பிய கரங்களுடன் காட்டப்பட்டுள்ளார்.

பிரஸ்தரத்திற்கு மேல் விமானத்தளங்கள் கட்டப்படாது கோயில் எளிமையாக அமைந்துள்ளது. கோயிலைச் சுற்றி திருமதில் ஒன்று எடுக்கப்பட்டுள்ளது. மேற்படிக் கூறப்பட்ட கட்டுமானங்கள் அனைத்தும் கி. பி. 18, 19-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. கருவறையில் வீற்றிருக்கும் மூல தெய்வம் மட்டும் பழமையும், புகழும் வாய்ந்தது.

### உய்யவந்த அம்மன்

வடதிசை நோக்கியத் திருவுருவாய் செட்டிக்குறிச்சி உய்யவந்த அம்மன் காணப்படுகிறாள். இதனை "வடக்குவாசல் செல்வி' என்றும் அழைக்கின்றனர். இது அசுரனை அழிக்கும் திருக்கோலம். செவ்வக வடிவான பீடத்தின் மீது அம்மன் வலதுக் காலை மடித்து ஊன்றி, இடதுக் காலைத் தொங்கவிட்டு கீழே கிடக்கும் அசுரனின் முகத்திற் திருவடியை வைத்த நிலையில் எண் கரங்களோடு காட்சி அளிக்கிறாள். வலது கைகளில் மேலிருந்து கீழாக திரிசூலம், மழு, வாள், கிளிமுகக் குறுவாள் ஆகிய ஆயுதங்கள் ஏந்தியுள்ளாள். இடது கைகளில் முறையே கபாலம், சிறு உடுக்கை கேடயம், பூசைமணி ஆகியவற்றைப் பற்றியுள்ளாள்.

உய்யவந்த அம்மன் நெற்றியில் உள்ள ரெத்தினப்பட்டம், வில் போன்ற விரிந்த புருவம், கீழ் நோக்கிய கண்கள், அழகிய நாசி, குவிந்த வாய், பக்கவாட்டில் உள்ள கடவாய்ப் பற்கள் யாவும் சிறப்பாக அமைந்துள்ளன. தலையமைப்பு அனல் நாக்குகள் கொண்ட அழகிய ஜுவால மகுடம், விரிந்த ஜடாபாரமாக அணி செய்யப்பட்டுள்ளது. வலது காதில் பிரேத குண்டலமும், இடது காதில் பத்ர குண்டலமும் அணி செய்கின்றன. கழுத்தில் பொட்டு மணி ஒன்றும், சரடு ஒன்றும், கண்டமாலை ஒன்றும், காரை ஒன்றுமாக

நான்கு அணிகள் அலங்கரிக்கின்றன. தோளில் கீர்த்தி முகவலையும், முன் கையில் ஆறு அடுக்குகள் கொண்ட வளையும் அழகு செய்கின்றன.

இடது தோளிலிருந்து மார்பின் குறுக்கே கபாலமாலை சரமாக அழகூட்டுகிறது. ஸ்தனங்களின் மேல் மார்புக்கச்சைக் கட்டப்பட வில்லை. தோளில் கீர்த்தி முகப்பாஜி பந்தமும், முன் கையில் ஆறு அடுக்குகள் கொண்ட அழகிய வளையும் காணப்படுகின்றன. இடை யிலிருந்து மேல் தொடை வரை அலை அலையான ஆடைத்தரித்துள் ளாள். ஆடைக்கட்டு பக்கவாட்டில் வனப்புடன் வளைந்து விரிந்து அழகூட்டுகிறது. கணுக்காலில் இரண்டு அடுக்குகள் கொண்ட தண்டையும், பாதங்களில் சிலம்பும் காட்டப்பட்டுள்ளன.

கீழே விழுந்து கிடக்கும் அசுரனின் தலையில் கரண்ட மகுடமும், காதுகளில் பத்ரகுண்டலமும், கழுத்தில் பிறைவடிவான அணியும், வயிற்றில் உதரபந்தமும் தரித்து, வலது கையிலே வாளும், இடது கையிலே கேடயமும் பற்றி கால்களை முடக்கிச் செயலற்று வீழ்ந்து கிடக்கிறான். அசுரனின் முகம் அபயக்குரல் எழுப்புகிறது.

நேரில் தேவியின் தோற்றம் சீற்றமுடன் காணப்பட்டாலும் பக்கவாட்டில் இருந்து நோக்கும்போது அதே தேவியின் முகத்தில் அமைதியைக் காண்கிறோம். இவ்வுருவம் சுமார் 107 செ.மீ. உயர முடையது. அகலம் 77 செ.மீ. இதன் நீண்டு ஒடுங்கிய முகமும் மெலிந்த உடல் அமைப்பும், அமர்ந்துள்ள நிலையும் ஆடையும் அணியும் பாண்டியர் காலக் கலை என்பதை தெளிவாகக் காட்டுகிறது. இது கி. பி. 13ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கலைப்படைப்பு.

## வழிபாடு

ஆண்டுதோறும் ஐப்பசியில் செவ்வாயில் கொடியேற்றி அடுத்த செவ்வாயில் பொங்கல் வைத்து புதன்கிழமை பெரியண்ணசாமியை அனழப்பர். இரண்டாம் செவ்வாயன்று இரவு பன்னிரண்டு மணிக்குள் கருவுற்ற முட்டைக் கோழியை அறுத்து குழம்பு வைத்து அம்மன் முன் பள்ளயம் [படையல்] போடுவார். அறுத்தக் கோழியின் இருக்கால்களை நான்குத் துண்டுகளாக நறுக்கி அதனைத் திரி சுற்றி பள்ளயத்தின் நடுவே நான்கு மூலைகளிலும் பதித்து விளக்கேற்றுவர்.

சர்க்கரைப் பொங்கலுடன் பூசைத் தொடங்கும். அம்மன் சன்னதி முன்புள்ள பலி பீடங்களில் சக்திக்கிடாயை ஒரே வெட்டில் பலிக் கொடுத்து, வெட்டுண்டகிடாயின் வாயில் அதன் வலதுக் காலை வெட்டி வைத்து அதன் எஞ்சிய உயிர் பிரியா வண்ணம் இருக்கைகளால் அதன் வாயை இறுக மூடுவர். அதே நேரத்தில் பூசாரி கொண்டு வந்தத் தீர்த்தம் கடாயின் தலையில் ஊற்றப்படும் தலை தனியே வெட்டுண்ட நிலையிலும் கிடாய் தன் வாயை ஒரு முறை திறந்து தீர்த்தத்தைப் பருகும். அப்படிப்பருகினால் நல்ல சகுனம் என நம்புவர். ஊர் செழிப்படையும் எனக் கருதுவர். இதற்குச் சக்திக் கிடாய் பூஜை எனப்பெயர்.

இப்பகுதியில் உய்யவந்த அம்மன் அமைந்துள்ள செட்டிக்குறிச்சி கிராமமே இவ்வூரைச் சுற்றியுள்ள எட்டு கிராமங்களுக்குத்தாய் கிராமமாகும். இதில் அடங்கிய எட்டுக் கிராமங்கள் முறையே :

1) வால்வாங்கி
2) செவ்வந்திநாதப்புரம்
3) பெரியநாயகிப்புரம்
4) காதலியாப்புரம் என்ற இராமனாயக்கன்பட்டி
5) சிதம்பரப்புரம்
6) பச்சேரி
7) இராமலிங்காப்புரம்
8) அருணாசலப்புரம்

மேற்படி எட்டுக் கிராமத்தினரும் அம்மன் கோயில் வழிப்பாட்டிலும் விழாவிலும் ஒருங்கிணைந்து கலந்து கொள்வர்.

சித்திரை மாதத்தில் மதுரையில் அழகர் ஆற்றில் இறங்கும் நாள் அன்று அம்மன் கோயிலுக்கு முன் சிறப்புப் பூஜை நடைபெறும். இக்கோயில் முன்னுள்ள ஓடையில் பொங்கல் வைத்து படைப்பர். அன்றிரவு அவ்வூர் ஆடுகள் நிறைந்துள்ள இடையில் சென்று 1 மொய்க்கு (20 செம்மறி ஆடுகள் - 1 மொய் - 25 வெள்ளாடுகள் - 1 மொய்) 5 தேங்காய் வீதம் உடைத்து பள்ளயம் வைத்துப் படைப்பர். புரட்டாசி மூன்றாம் சனிக்கிழமையிலும் இப்பூசை நடைபெறும்.

ஆடி முதல் புதனன்று செம்மறி ஆடு கொண்டுவந்து அம்மன் கோயில் வேளாஞ்செடி முன்னால் அமைந்துள்ள சாத்தாவுக்கு

வெட்டி அதன் இரத்தத்தை சட்டியில் பிடித்து தீர்த்தம் ஊற்றிக் கலக்கி, இடையில் உள்ள ஆடுகள் மீது தெளிப்பர். இவ்விதம் தெளிப்பதால் ஆடுகளுக்கு நோய் வராது; நல்ல நிலையில் இருக்கும் என நம்புகின்றனர்.

**கங்கையம்மன் கோயில்**

இவ்வூர் பெருமாள் கோயிலுக்கு மேற்புறம் பழைய கங்கை யம்மன் கோயில் உள்ளது. தற்போது அக்கோயிலில் மூலதெய்வம் ஏதும் வழிபாட்டில் இல்லை. கங்கையம்மனுக்கென்று வேறொரு புதிய கண்மாய்க்கரையில் ஊரார் கோயில்கட்டி உள்ளனர்.

**புதிய கங்கையம்மன் கோயில்**

இக்கோயில் கிழக்கு பார்த்து அமைந்துள்ளது. கருவறை' அர்த்த மண்டபம் பரிவாரதெய்வங்களுக்குரிய சன்னதிகள், திருமதில் ஆகிய பகுதிகளுடன் கோயில்அமைக்கப்பட்டுள்ளது.

**கங்கையம்மன்**

கருவறை வழிப்பாட்டில் உள்ள தெய்வம் பன்னிருக் கரங்களுடன் நின்ற திருக்கோலத்தில் காணப்படுகிறது. அண்மைக் காலத்து சிலை என்றாலும், அழகிய உருவாக உள்ளது. இக்கோயிலுக் குரிய அம்மனின் உலோகவிக்கிரகம் பாதுகாப்பிற்காக ஊர் மடத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் உற்சவ அம்மனுக்கு சிறப்பு வழிபாடு நடக்கும். ஞாயிற்றுக்கிழமை மாலையில் ஊர்ப்பூசாரி உற்சவ விக்கிரகத்தை மடத்திலிருந்து உலாவாக கங்கை யம்மன் கோயிலுக்கு எடுத்து வருவார். இங்கு சிறப்புப் பூசை நடை பெறும். விசேஷ காலங்களில் சோழவந்தான், திண்டுக்கல், நிலக் கோட்டை, வாடிப்பட்டி, மதுரை ஆகிய பகுதிகளிலிருந்து அடியார் கள் வந்து வழிபடுகின்றனர்.

**கங்கையம்மன் படிமம்**

தாமரை இருக்கையில் பன்னிருத் தோள்களில் ஆயுதங்கள் ஏந்தி நின்ற நிலையில் வடிக்கப்பட்டுள்ளாள். வலதுத் தோள்களில் மேலி ருந்து கீழாக முத்தலை சூலம், ஆழி, அங்குசம், வாள், அம்பு, மலர் ஆகியவை ஏந்தி காட்சியளிக்கிறார். இடதுத் தோள்களில் முறையே

கபாலம், சங்கு, பாசக்கயிறு, கேடயம், வில், மணி ஆகியவற்றைக் காணலாம், தலையில் நீண்ட மகுடமும், பக்கவாட்டில் ஜுவாலையும், அணி செய்கின்றன. காதுகளில் செவிப்பூக்களும், பத்ரக் குண்டலங்களும், கழுத்தில் கண்டமாலையும், இடையில் ஆடையும் அழகு செய்கின்றன. இப்படிமம் மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலிருந்து வடித்துக் கொண்டுவரப்பட்டதாகக் கூறுவர். இது முழுதும் கனமாகச் செய்யப்பட்ட செப்புத்தருமேனி. இதன் உயரம் 34 செ.மீ. அகலம் 18 செ.மீ. காலம் கி. பி. 18ஆம் நூற்றாண்டு.

### விநாயகர் படிமம்

இக்கோயிலில் உள்ள விநாயகர் படிமம் கிராமியக் கலைப் பாணியில் அமைந்துக் காணப்படுகின்றது. அங்குசமும், பாசமும் ஏந்திய மேற் கைகளும், ஒடிந்தக் கொம்பும், மோதகமும் ஏந்திய கீழ் கைகளும், காணத்தக்கன. இடையில் அணிந்துள்ள ஆடையும், உடலை அலங்கரிக்கும் அணிகலன்களும், இடப்புறம் நீண்டு மோதகத்தைப் பற்றும் தும்பிக்கையும், கிராமியப் பாணியை வெளிக்காட்டுபவை. காலம் கி. பி. 19ஆம் நூற்றாண்டு.

### பெரியண்ணசாமிக் கோயில்

இதற்கு உருவக வழிபாடு இல்லை. தெலுங்கில் பெத்தண்ண சாமி என அழைப்பர். தெலுங்கு மொழிப்பேசும் சக்கிலியர்களின் மூல தெய்வமாகிய உய்யவந்த அம்மனின் மூத்த சகோதரனாக இதனைக் கருதி வழிபடுகின்றனர்.

### செவி வழிச் செய்தி

இவ்வூரை ஆண்ட சாரங்கராஜாவின் மாடுகள் மேய்ச்சலுக்கு வந்தபோது அவற்றை சக்கிலியர் என்னும் பகடைக்காரர்கள் களவுச் செய்து வெட்டியதாகவும், செய்தியறிந்த அரசன் காவல் ஆட்களை ஏவியபோது பகடைக்காரர்கள் தங்களைக் காப்பாற்றும்படி பெத்தண்ணசாமியை வேண்டினராம். காவலாளிகள் அருகே வந்த போது பெத்தண்ணசாமி குதிரை வடிவில் வந்து பகடைக்காரர்களுக்கு அருள்செய்து வெட்டுண்டு சிதறிக்கிடந்த மாட்டுக் கறிகளை மான் கறியாகவும் மாட்டுத் தலையை மான் தலையாகவும் மாற்றி பகடைக்காரர்களை காப்பாற்றியதால் இன்றும் அவர்களது அடிப்படைத் தெய்வமாக இருந்து வருகிறது. ★

# கடம்பூரின் தொன்மை வரலாறு

**தே. கோபாலன்,** எம்.ஏ.,

தொல்லியல் அலுவலர், சென்னை.

**அமைவிடம்**

சிதம்பரனார் மாவட்டத்தில் கோவில்பட்டி வட்டத்தில், கயத்தாறு - தூத்துக்குடி சாலையில் கடம்பூர் அமைந்துள்ளது. இப்பகுதி கடம்புவனம் நிறைந்த பகுதியாக இருந்திருக்க வேண்டுமென்றும், ஆகையினால்தான் 'கடம்பூர்' என பெயர் பெற்றதாகவும் ஒரு கருத்து நிலவுகிறது. மேலும் இவ்வூருக்கு அருகே 'கடம்பாறு' என்ற தாமிரபரணியின் கிளை நதி ஒன்று ஓடியதாகவும், நாளடைவில் மறைந்து விட்டதாகவும் நம்பப்படுகிறது. இவ்வூருக்கு அருகே உள்ள சங்கரப்பேரி, ஓம்நமாகுளம், இளவேலங்கல், பரிவில்லிக்கோட்டை, கொல்லங்கிணறு, மருதன்வாழ்வு, நாரைக்கிணறு, புளியம்பட்டி, சீவலப்பேரி ஆகிய ஊர்களில் தொடர்ச்சியாக நீர் தேங்கக் குளங்கள் இருப்பதனால் இப்பகுதியில் தாமிரபரணி ஆறு ஓடியிருப்பதற்கு வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகிறது.

கடம்பு என்பதற்கு "சீம்பால்" என்ற பொருளும் உண்டு. இவ்வாறு நோக்கின் இப்பகுதியில் கால்நடைகள் வளர்ப்பு மிகுதியாக காணப்பட்டிருக்க வேண்டும். இதனை உறுதிப்படுத்தும் வண்ணம் இவ்வூருக்குக் கீழ்ப்புறம் 10 கி.மீ. தொலைவில் பசுவந்தனை என்ற கிராமம் அமைந்துள்ளது. பசுக்கள் வந்தடையும் இடமாக இருப்பதினால் 'பசுவந்தனை' எனப் பெயர் பெற்றதாகக் கருதப்படுகிறது எனவே, இப்பகுதி முழுமையும் ஒரு காலத்தில் கால்நடைகள் வளர்ப்பு பிரசித்தி பெற்றிருக்க வேண்டும். இக்காரணத்தினாலும் இவ்வூர் கடம்பூர் எனப் பெயர் பெற்றிருக்க வாய்ப்புள்ளது.

இவ்வூரின் தொன்மைச் சான்றுகள் பெருங்கற்காலம் முதல் நமக்கு கிடைக்கப் பெறுகின்றன. இவ்வூரில் காணப்படும்

பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுக்களில் இவ்வூர் 'ஆசிநாட்டுக் கடம்பில்' எனக் குறிப்பிடப்படுகின்றது. மேலும் இவ்வூர் 74 பாளையப்பட்டுக்களில் ஒரு பாளையப்பட்டாக விளங்கியிருக்கின்றது. இவ்வூர் சமீன் பரம்பரையினர் இன்றும் உள்ளனர். சமீன் வாரிசாக தற்போது 'சீனிவெள்ளாள சிவசுப்பிரமணிய பூலோக பாண்டிய சொக்கத்தலைவர்' என்ற பெயரில் ஒருவர் இருப்பது குறிப்பிடத்தக்கது.

### பெருங்கற்காலச் சின்னங்கள்

கடம்பூரில் உள்ள அரசு மாணவர் இல்லக் கட்டடத்திற்கு வடமேற்கே உள்ள மேட்டுப் பகுதி 'உச்சிப்பரும்பு' என அழைக்கப்படுகின்றது. இது 'பறம்பு' என அழைக்கப்பட வேண்டும். இப்பகுதியில் சுமார் 16 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தாழிகள், கறுப்பு-சிவப்பு வண்ணக் கலயங்கள் ஆகியன சிதைந்த நிலையிலும், இரும்பினால் ஆன அம்பு முனைகள் ஆகியனவும் ஆங்காங்கே பெருங்கற்காலத்தினைச் சுட்டும் வண்ணம் காணப்படுகின்றன. இறந்த மனிதனை தாழியினுள் வைத்து அதனுடன் படையல்களை வைத்துப் புதைக்கும் வழக்கத்தினைக் கொண்டிருந்தமையினை தாழியினுள் காணப்பட்ட எலும்புத் துண்டுகள், சிறிய கலயங்கள் மற்றும் அகல் விளக்குகள் நமக்கு உணர்த்துகின்றன. விலங்கினங்களை வேட்டையாடுவதற்கு இரும்பினாலான அம்பு முனைகளை கழியினில் கட்டிப் பயன்படுத்தியுள்ளதையும் உணர்த்துகின்றன. இவற்றின் நேர்த்தியான வடிவமும், கூரிய முனையும் இவைகளை உருவாக்கிய மனிதனின் தொழில் நுட்பத் திறனை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன. சிதைந்த தாழியின் வாய்ப் பகுதியின் விட்டம் 20'', கழுத்துச் சுற்றளவு 36'' ஆகும். இத்தாழி உருவில் பெரிதாக அமைந்திருக்க வேண்டும்.

## பிற்காலப் பாண்டியர் சிவன் கோயில்

### அமைப்பு

கடம்பூருக்கு மேற்கே பாழடைந்த நிலையில் ஒரு பிற்காலப் பாண்டியர் காலத்திய சிவன் கோயில் உள்ளது இக்கோயில்

கர்ப்பகிரகம், அர்த்தமண்டபம், முகமண்டபம் என்ற அமைப்பினைக் கொண்டு விளங்குகின்றது. முன் மண்டபத்தின் வலப்புறம் அம்மனுக்கு ஒரு சன்னதியும், கோயிலின் தென்மேற்கு மூலையில் பிள்ளையாருக்கு ஒரு சன்னதியும், வடமேற்கு மூலையில் முருகனுக்கு ஒரு சன்னதியும், தெற்கே தட்சிணாமூர்த்திக்கு ஒரு சன்னதியும் அமையப்பெற்றுள்ளன.

## சிற்பங்கள்

இக்கோயிலில் உள்ள எந்த சன்னதியிலும் உரிய விக்ரகம் ஏதுமில்லை. தட்சிணாமூர்த்தியின் சிற்பம் மட்டும் சிதைந்த நிலையில் கோயில் வளாகத்தினுள்ளேயே கீழே கிடக்கின்றது. இச்சிற்பம் பிற்காலப் பாண்டியர் கலைப் பாணியினை எடுத்து இயம்பும் வண்ணம் அழகுற வடிக்கப்பெற்றுள்ளது. வலக்கால் அஞ்ஞான அசுரனை வதம் செய்த நிலை; இடக்கால் மடக்கி வலக்காலின் மேல் வைத்த நிலை; வலது கீழ்க்கரம் அபய முத்திரை; மேலிரு கரங்களில் அல்லி மலர்கள்; வலது காதில் மகர குழை; இடது காதில் பத்ர குண்டலம்; கழுத்தில் உருத்திராட்ச மாலை அணிந்து காணப் படுகிறது.

## சுரங்கம்

கோயில் நுழைவாயிலின் இடப்புறம் மிகவும் சிதைந்த நிலையில் ஒரு சிறிய மண்டபம் போன்ற அமைப்பில் கீழ் நோக்கிப் ஒரு பாதை செல்கிறது. இது சுரங்கப் பாதையாக இருக்கலாம்.

## நாயக்கர் கால மண்டபமும், ஓவியங்களும்

அர்த்த மண்டப நுழைவாயிலின் இருபுறமும் துவாரபாலகர்கள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளனர். இவ்வோவியங்கள் மிகவும் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. இந்நுழைவாயிலின் கூரைப் பகுதியில் கஜலட்சுமியும், கஜலட்சுமியின் இருபுறமும் இரு பெண் அணங்குகள் இறக்கைகளுடனும், கையில் இசைக் கருவியுடனும் அழகிய ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளனர். இவ்வோவியங்கள் அனைத்தும் நாயக்கர் காலத்தில் தீட்டப்பட்டவையாகக் காணப் படுகின்றன.

முன் மண்டபத்தில் மொத்தம் 5 தூண்கள் உள்ளன. எதிரெதிரே உள்ள முதல் இரு தூண்களில் ஆண் மற்றும் பெண்ணின்

உருவங்கள் கைக்கூப்பிய நிலையில் புடைப்புச் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்களின் உருவ அமைதி நாயக்கர் காலத்தினை ஒத்ததாக அமைந்துள்ளது.

## கல்வெட்டுகள்

இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் இவ்வூரின் பெயரை ''ஆசிநாட்டுக் கடம்பில்'' எனக் குறிப்பிடுகின்றன. மேலும் இக்கல்வெட்டுக்களிலிருந்து ''பெருங்கருணீசுவரமுடையார்'', திருச்சர முடைய நாயனார்'' என்ற இரு சிவன் கோயில்கள் இவ்வூரில் இருந் தமைஅறியப்படுகின்றது. இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள நான்கு கல்வெட்டுக்களில் வீரபாண்டியனின் (கி.பி. 1253-1268) எட்டாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டும், குலசேகர பாண்டியனின் (கி.பி.1268-1311) கல்வெட்டுமே முழுமையாகப் படிக்க இயலுமாறு காணப் படுகின்றன. மற்ற இரு கல்வெட்டுக்களில் தென்புற சுவரில் பொறிக்கபபட்டுள்ள ஒரு கல்வெட்டின் மத்தியில் தட்சிணாமூர்த்தி சன்னதி கட்டப்பட்டிருப்பதால் கல்வெட்டின் தொடக்கம் மற்றும் முடிவுப் பகுதி தவிர நடுப் பகுதி முழுமையும் இச்சன்னதியின் பின் புறம் மறைக்கப்பட்டுள்ளது. மேற்புறச்சுவரில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு வாசகங்கள் மிகவும் பொறிந்துபோயுள்ளன. இக் கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளிலிருந்துஆதி சண்டேசுரப் பிள்ளையாரின் பேரினால் நிலம் தானமாக வழங்கப்பட்டிருப் பதனை அறிய முடிகின்றது.

## வீரபாண்டியன் (கி.பி.1253-1268) கல்வெட்டு 1

இக்கோயிலின் வடபுற சுவரில் இம்மன்னனது எட்டாவது ஆட்சி யாண்டுக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின் எழுத்தமைதியினை நோக்கும்போது, இது கி.பி. 13-ஆம் நூற் றாண்டினைச் சார்ந்ததாக இருப்பதால், இவன் கி.பி. 1253-1268ல் ஆட்சி புரிந்த வீரபாண்டியன் என்பது தெளிவாகிறது. ''திருமகள் வளர'' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி இவனுக்குரியதாகும். இவனே தில்லையில் வீராபிடேகமும், விஜயாபிடேகமும் செய்து கொண்டவனாவான். இக்கல்வெட்டு இவ்வூரில் திருச்சரமுடைய நாயனார் சிவன் கோயிலுக்கு ஆதி சண்டேஸ்வரப் பிள்ளையார் பேரில், சீவல்லவ வளநாட்டு முரம்பனூரான திருச்சிற்றம்பல நல்லூரைச் சார்ந்த கண்ணன் சாத்தனான கொடுத்து முகமழகிய

பன்மன் இந்நாயனாருக்கு சிவராத்திரிப் பூசைக்கு அமுதுப்படி, சாத்துப்படிக்காக இறையிலியாக நிலம் தானமாக கொடுக்கப் பட்டதனையும் அந்நிலத்துக்குரிய எல்லைகளையும் குறிப்பிடுகின்றது. இக்கல்வெட்டின் மூலம் இவ்வூரில், பதினாறடிக்கோல்' அளவு கோலாக இருந்ததென்பதனை 'பதி' னாறடிக் கோலால் வழிக்குக் கழிந்த நிலம்' என்ற கல்வெட்டு வாசகச் சொற்றொடர் நமக்கு உணர்த்துகின்றது. மேலும் அக்காலத்தில் வழக்கில் இருந்த அளவைகளான 'மா', 'காணி', 'முந்திரி', போன்றவற்றினையும் நாம் அறிந்து கொள்ள முடிகின்றது. இக் கோயிலின் சிவராத்திரிப் பூசைக்கு, கடமை, பொன்வரி, விநியோகம் திருவாசல்பேறு, திருக்காமப்பேறு, சில்வரி பெருவரி போன்ற வரிகள் நீக்கி இறையிலியாக இம்மன்னனின் ஒன்பதாவது (எட்டாவது ஆட்சி யாண்டின் எதிராமாண்டு) ஆட்சியாண்டு முதல் இந்நிலத்தினால் கிடைக்கும் வருவாயினைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என குறிப்பிடுவதிலிருந்து இம்மன்னனது ஆட்சிக் காலத்தில் நிலத்திற்கு விதிக்கப்பட்ட பல்வேறு வகையான வரிகளை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது. 'கடமை'என்பது அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய வரிகளைப் பொதுவாகக் குறிக்கும் சொல் ஆகும். பொன்வரி என்பது பொன்னாக இறுக்கும் வரி என்றும், பொன்னை நாணயமாக அச்சிடுவதற்கான வரி என்றும் பொருளாகும்; சில்வரி என்பதற்கு சில்லறை வரிகள் என்று பொருள்படும் 'திருவாசல்ப் பேறு'' மற்றும் திருக்காமப்பேறு'' என்பதில் பேறு என்பதற்குப் பதவிக்கு உரிய காணிக்கை நிலம் என்றும் பொருள்படும்.

## கல்வெட்டு

1. [திருவ]ாய்க் கேழ்விக்கு மேல் ஸ்ரீகோச்சடைய பன்மரான திரிபுவன சக்கரவத்திகள் ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு எட்டாவது மாசி மாதம் சீவல்லவ வள நாட்டு முரம்பனூரான திருச்சிற்றம்பல நல்லூரில் ஊரா யிசைந்த ஊரோம் ஆசிநாட்டு

2. [திரு]ச்சரமுடைய நாயனார் கே[ா]யில் ஆதிசண்டேஸ் வரர் பிள்ளை யார்[க்]கு விலைப் பிரமாணம் பண்ணிக் குடுத்த பரிசாவது இவ்வூர் கண்ணன் சாத்தனான குடுத்து

முகமழகியபன்மன் இந்நாயனார்க்கு சிவராத்திரி பூசைக்கு அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்டு

3. கொண்டு விட்ட நிலத்துக்கு எல்லையாவது எங்களூர் மேல் கானத்துக் கருஞ்செயில் ஐய்வேலிப் பற்றுளே வழங்கல் ஊர் எல்லைக்குக் கிழக்கும் வடவெல்லை கன்னி நாட்டவரையர் பழம்பற்றுக்கு தெற்கும் கீழ் எல்லை உத்தமபாண்டிய மூவேந்த வே[ளான்]

4. பெற்ற எல்லைக்கு மேற்கும் தென் எல்லை தியாகாபரண மூவேந்த வேளார் பற்றுக்கு வடக்கும் ஆக இந்நான் கெல்லைக் குட்பட்ட நிலம் நாடமைந்து கட்டின பதினாறடிக் கோலால் வழிக்குக் கழிந்த நிலம் முக்காணி உட்பட்ட நிலம் ஒன்றே எண்மாவரை முந்திரி

5. க்காணி முந்திரிகையின் . . . . இதனெதிராமாண்டு முதல் கைக் கொண்டு அனுபோவிப்பாராகவும் இந் நிலத்தால் வந்த கடமை பொன் வரி விநியோகம் திருவாசல்பேறு திரு

6. க்[கா]மப்பேறு சில்வரி பெருவரி மற்று மெப்பேர் பட்டனவும் நாங்களே யிறுப்போமாகவும் இவ்வாண்டு முதல் சந்திராதித்தவர் யிறையிலி தேவதானமாக சிவ ராத்திரிப் பூசைக்கு கைக்கொண்டு அனுபோவிப்பார[ா] கவும் இப்படி சம்மதித்து சண்டேசுரவிலையாக விற்று

7. விசைஞ்ச ஊரோம் ஆதிசண்டேசுர பிள்ளை [யா]ர்[க்]கு இந்நிலம் இ[வ்]வாண்டு முதல் சந்திராதித்தவர் யிறையிலி தேவதானமாக கைக்கொண்டு கல்லிலும் செம்பிலும் வெட்டிக் குடுத்தோம் இப்படி நாங்கள் சண்டேசுர விலையாக விற்ற நிலத்துக்கு இப்படி சம்ம

8. திக்க ஊராக இசைந்த ஊரோம் ஆதி சண்டேசுர பிள்ளையார் [க்] கு இப்படிக்கிவை அரைசன் தேவதான மாக தேவேந்திர விழுப்பரையன் எழுத்து இப்படிக்கிவை குணவன் நம்பியான உத்தமபாண்டியன் எழுத்து இப்படிக்கிவை கரியான் அழகான கண்ணான்

9. விலைப் பிரமாணம் எழுதினேன் ஊர் கணக்கு . . . . ள்ளந் தாங்கி கந்தனான மூவேந்த வேளான் எழுத்து.

## குலசேகரபாண்டியன் (கி.பி. 1268-1311) கல்வெட்டு 2

இரு வரிகளில் மட்டுமே பொறிக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டில் இம்மன்னனது பெயர் மற்றும் ஆட்சியாண்டினைத் தவிர வேறு செய்திகள் ஏதுமில்லை. இம்மன்னன் காலத்தினை அறிவதற்குத் துணை புரியும் வகையில் "எம்மண்டலமுங் கொண்டருளிய" என்ற விருதுப் பெயரினை இக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இக்கல் வெட்டில் இம்மன்னனது ஆட்சியாண்டு தெளிவாக பொறிக்கப்பட வில்லை. *30*-வது ஆட்சியாண்டாக இருக்கலாம்,

### கல்வெட்டு

1. ஸ்ரீகோமாரபன்மரான திரிபுவன சக்கரவத்திகள் எம்[ம] ண்டலமுங் கொண்டரு[ளிய] ஸ்ரீ குலசேகர தேவர்க்கு யாண்டு [நூய]

## கல்வெட்டு 3

தென்புறச் சுவரில் தட்சிணாமூர்த்தி சன்னதியினால் கல்வெட்டின் நடுப் பகுதி மறைக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் இவ்வூர் 'ஆசிநாட்டுக் கடம்பில்" என்றும் இறைவனின் பெயர் பெருங்கருணீ சுவரமுடையார் என்றும் குறிப்பிடப்படுகின்றது. இறைவனின் நித்திய நைமித்தியங்களுக்கு வேலங்குடியில் நிலம் இறையிலி யாகக் கொடுக்கப்பட்டதனை இக்கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது. கடம்பூருக்கு மேற்கே 9 கி.மீ. தொலைவில் அகிலாண்ட புரத்திற்கு தெற்கே 2 பர்லாங் தொலைவில் வேலங்குடி கண்மாய் ஒன்றுள்ளது இக்கல்வெட்டுக் குறிப்பிடும் வேலங்குடி இப்பகுதியாக இருக்க வேண்டும்.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் கோ . . . . . . . . . . லிபுரத்து வியாபாரிகளில் பட்டன் திருச்சிற்றம் பலமுடையா
2. ன் ஆசிநாட்டுக் கடம்பில் [எ]ழுந்தருளிவித்த பெருங் கருணீஸ்வர [முடையார்] . . . . . . . ப்படி மாற்று திட்டு வேண்டு நித்த நிமந்தங்க[ளு]க்குக் கீழ் வேம்பு

3. நாட்டுத் திருநெல்வேலிக் . . க கேரளகலக்குன்றன் வேணுவனப் , . . . . . . காணியாக [க்குடு]த்த வேலங் குடியில் நான்கெ[கல்]லைக்குட்பட்ட

4. நீர் நிலமுங் கருஞ்செய் புன்[செ]யும் நத்தமுந் தோட்ட முங் குள . . . . . . . . . .ளிச் சந்தங்க . . யுள்ள நிலக் கடமையுந்த . . .

5. தருவதான அச்சுங் காரியவராட்சியும் வெட்டிப் பாட்டமும் ப . . . . . . . . . ந் தரியின் செக திரையுந் தட்டொளி பாட்ட மு மின் வரி பொன் வரியு

6. மற்று மெப்பெயர்பட்டன முட்பட்டப் பதினொன்றாவதி னெதிர் . . . . . . . வேணுமென [க]ண்ணன் தமிழ்ப் பல்லவரையன் நமக்குச் சொன்னமை

7. யில் பெருங்கருணீஸ்வரமுடையார்குத் திருப்படி மாற்றன் னாட்டு வேண்டும் நித்[திய]ம் வெலங்குடியில் நான் கெல்லைக்குட்பட்ட நீர் நிலமும் கருஞ்செய் புன்செயு நத்தமு தோ

8. ட்டமுங் குளமும் குளபரிப்பு முட்பட்ட நிலத்திற் பழந் தேவதானம் பள . . . . . . . . .ன அத்தங் காரிய வராட்சியும் வெட்டி பாட்டமும் பஞ்சு பிலி சந்து விக்கிரமப் பெ

9. றும் வாசல் பெறும் யிலாஞ்சனைப் பெறு . . . . . . செக்றையுந் தட்டொளி பா . . . . . . . . தான யிறையிலி யாய் யிறுப்பதாகயிட்டு வரியிலா ரெழுத்திட்ட உள் வரியும் நங்கேழ்வி

10. யும் தரச் சொன்னோம் கைக்கொண்டு இப்படி சந்திரா தித்தவர் செல்வதாகக் கல்வி . . . . . . . த்தாழ்வான் ஆண்ட பிரானழகனான அழகிய பாண்டிய விழுப் பதரையனெழுத்து இவை செல்லிருக்கை

11. நாட்டுச் சக்கரபாணி நல்லூர் அரையன் சேனைப் பெருமாளான குருகுலராய . . . . . . . . . -த்தானான பல்லவராயனெழுத்து

## கல்வெட்டு 4

மேற்புறச் சுவரிலுள்ள இக்கல்வெட்டு மிகவும் பொறிந்த நிலையில் இக்கல்வெட்டைப் பொறித்த மன்னன் பெயர் அறிய இயலாதவாறு உள்ளது. இருப்பினும் திருச்சரமுடைய நாயனார் கோயிலுக்கு ஆதிசண்டேசுரப் பிள்ளையார் பேரினால் தானம் கொடுக்கப்பட்டதனை இக்கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது.

### கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோமார பன்மரான ....... பாண்டிய ........ யிசைந்த ஊெ[ராம்] ....... யார்குடி ........ பள்ளிக்குடுத்த பரிசா
2. வது எங்களூர் நாயனா.......டி புச்சுப்பட ...... சந்திராதித்தவரை கல்லிலு [செம்பிலு வெட்டிக்] குடுத் தோம் ......... ா யிசைந்த ஊரோம்.
3. ஆதி சண்டேசுரப் பிள்ளைய[ா]ரு ............ சை மாணிக்க ..... தேவன் [உள்]ளிட்டார்க்குப் உருப நார[ாயண]த்து இவை ஆணை அம்மையப்பனான தேவேந்தி
4. ர பன்மன் உள்ளிட்டார்க்கும் இவை....... கணக்கு சேனாப....னான கலிங்கத்தரையன் எழுத்து உ.

## பிற செய்திகள்

### அ) சரவணப்பொய்கை

இவ்வூரிலுள்ள அரசு மாணவர் இல்லக் கட்டடத்திற்கு தென் கிழக்கே ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் கிணறு ஒன்று உள்ளது. இதனை சரவணப்பொய்கை என இவ்வூர் மக்கள் அழைத்து வருகின்றனர். இக்கிணற்றில் எப்போதும் நீர் வற்று வதில்லை எனக் கூறப்படுகின்றது.

### ஆ) கோடங்கால்

கடம்பூருக்கு தென்கிழக்கே சுமார் இரண்டு கி.மீ. தொலைவில் கோடங்கால் என்ற ஊர் உள்ளது. இவ்வூரில் நரசிங்கப்பெருமாள்

கோயில் ஒன்று அமைந்துள்ளது. சரவணப்பொய்கையில் நீராடி விட்டு இக்கோயிலினை வலம் வந்தால் மகப்பேறு கிட்டும் என இன்றுவரை இப்பகுதி மக்களால் நம்பப்பட்டு வருகிறது.

## இ) இரட்டைப்பிள்ளையார் கோயில்

கடம்பூருக்குத் மேற்கே சிவன் கோயிலுக்கருகில் இரண்டு பிள்ளையார்கள் கொலுவிருக்கும் இரட்டைப் பிள்ளையார் கோயில் ஒன்று உள்ளது. இச்சா சக்தி கணபதி, கிரியா சக்தி கணபதி என இவ்வூர் மக்களால் அழைக்கப்படுகிறது.

## முடிவுரை

கடம்பூர் பெருங்கற்காலம் தொட்டு பிற்காலப் பாண்டியர் காலத்தில் சிறப்புற்று நாயக்கர் காலம் வரை தொடர்ந்தும், 74 பாளையப்பட்டுக்களில் ஒன்றாக சிறந்து விளங்கியும் ஒரு தொடர்ச்சியான வரலாற்றுப் பின்னனியினை தன்னகத்தே கொண்டுள்ளதை அறியலாம்.

---

கட்டுரைக்கு துணை புரிந்த நூல்கள்

1) மெய்கீர்த்திகள் - பூ. சுப்பிரமணியம்
2) தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம். 3. பகுதி 2.
3) பாண்டியர் வரலாறு - டாக்டர் கே. வி. இராமன்
4) பாண்டியர் வரலாறு - சதாசிவப்பண்டாரத்தார்
5) 616 of 1929-30
6) Neolithic and Megalithic Culture of Tamilnadu.

---

# வண்ணக்கன் - ஓர் ஆய்வு

**சு. இராசகோபால்,** எம்.ஏ.,
தேர்வு நிலைக் கல்வெட்டாய்வாளர்
திருமலை நாயக்கர் அரண்மனை, மதுரை.

வடம வண்ணக்கன் பேரி சாத்தனார், வடம வண்ணக்கன் தாமோதரனார், புதுக்கயத்து வண்ணக்கன் கம்பூர் கிழான், விற்றூற்று வண்ணக்கன் தத்தனார், வண்ணக்கன் சோருமங் குமரனார் என்று சங்ககாலத்தில் புலவர்கள் இருந்திருக்கிறார்கள்.[1] இவர்களுக்கு வண்ணக்கன் என்ற பொதுப்பெயர் இருந்திருக்கிறது. அரச்சலூர் கல்வெட்டில்[2] 'மணிய் வண்ணக்கன் தேவன் சாத்தன்' என்பவன் குறிக்கப்படுகின்றான். பிற்காலக் கல்வெட்டுகளிலும் வண்ணக்கன் பற்றிய குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. வண்ணக்கன் என்று குறிக்கப்படும் இவர்கள் யார்? என்பதை இக்கட்டுரை எடுத்துக்காட்ட முனைகிறது.

வண்ணம் என்பது நிறத்தினைக் குறிக்கும் பொது வழக்கு எனினும் 'நின்ற வண்ணம்', 'இருந்த வண்ணம்', 'கிடந்த வண்ணம்' போன்ற சொற்றொடர்களால் 'அமைப்பு', 'தோற்றம்' என்ற பொருளும் பெறப்படும். பொன், மணி, காசு முதலியவற்றின் 'அமைப்பு-தோற்றம்' பற்றி ஆய்ந்து அவற்றினை மதிப்பிடும் பணியைச் செய்பவர்களாக வண்ணக்கன் என்பவர்கள் இருந்திருக்கிறார்கள். கல்வெட்டு மற்றும் இலக்கியக் குறிப்புகளால் இதனை இங்கு அறிய முனைவோம்.

நில விற்பனை தொடர்பான பல கல்வெட்டுகளில், விலைப்பணம் விற்றவரின் கைக்குச் செல்லும் முன்னர் ஆவணக்களத்தில் காட்டப் பட்டதாகக் குறிப்புகள் வருகின்றன. அக்கல்வெட்டுகள் 'ஆவணக் களரியே காட்டேற்றிக் கைச்செலவறக் கொண்டு,[3] என்ற வரிகளால் இதனைக் குறிக்கின்றன. ஒரு விலைப் பிரமாணக் கல்வெட்டு 'இப்பணம் முப்பதும் வண்ணக்கு ஆதிச்ச தேவர் காட்சிப்படி காட்டி ஏற்றி கைச்செலவுறக் கொள்ளப்பட்டது' என்கிறது.[4] ஆவணக் களத்தில் காசினைப் பார்ப்பவராக (பரிசோதிப்பவராக) இங்கு வண்ணக்கு ஆதிச்ச தேவர் சுட்டப்படுகிறார். காசினைப் பரிசோதிக்க வேண்டிய அவசியம் என்ன?

முன்னாளில் உலோக நாணயங்களே செலாவணியாக விளங்கின. இவை காலப்போக்கில் தேய்ந்து எடை குறையக் கூடியவை. மேலும், மன்னருக்கு மன்னர், இடத்துக்கிடம் இவை வெவ்வேறு அளவும் உருவமும் பெற்றன. ஒரு குறிப்பிட்ட நிலத்தின் விலை 13ஆம் நூற்றாண்டில் 1, 91, 500 செப்புக்காசுகள் வரை மதிப்புப்பெற்று பெரும் எண்ணிக்கையில் காசுகள் கைமாறுவது வழக்காயிற்று.[5] 9, 10ஆம் நூற்றாண்டுகளில் செலாவணியாக இந்த அளவு காசுகளின் எண்ணிக்கை இல்லை. நிலங்களின் விலைகள் கழஞ்சு, காணம் என்ற பெயர்களில் பெரிதும் சிறிதுமான பொன்னால் நிர்ணயிக்கப்பட்டன. செம்பு, வெள்ளி முதலிய உலோகக் காசுகளும், ஈழத்திலிருந்து வந்த ஈழக்காசு, ஈழக்கருங்காசு முதலியவையும், பிறவெளிநாடுகளைச் சேர்ந்த 'திரமம்' போன்றவையும் நிலம் மற்றும் பிறவற்றின் விலைப்பொருளாக இருந்தன.

இந்நிலையில் காசுகளின் உண்மைத்தன்மை, மாற்றுத்தன்மை வழக்கில் செல்லுபடியாகும் தன்மை முதலியவற்றைப் பரிசோதிக்க வேண்டிய அவசியம் இருந்தது. எனவே ஊர்தோறும் இவற்றைப் பரிசோதிக்கக் கூடிய அறிவு பெற்ற வண்ணக்கன் என்ற பணியாளர்கள் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஊர்தோறும் வண்ணக்கன் என்பவர் இருந்ததைக் கல்வெட்டுகள் 'இவ்வூர் வண்ணக்கன் முள்ளிக் குறும்புடையான் வழக்கே துணை குணசீலன்',[6] 'இவ்வூர் வண்ணக் கன் தரம் வேண்டு தன்மஞ் செய்யப் பெறுவானாக'[7] என்ற வரிகளால் காட்டுகின்றன. முதலில் குறித்த சங்கப்புலவர்களின் பெயர்களோடு ஊரும் வண்ணக்கன் என்ற சொல்லும் வருவதும் இதனையே காட்டுகிறது எனலாம்.

செப்புக் காசுகளின் வழக்கு 11ஆம் நூற்றாண்டிற்குப் பிறகே பெரும் வழக்குப் பெற்றது[8] அதற்கு முற்பட்ட காலத்தில் வண்ணக்கர்கள் அன்று செலாவணியாக வழக்கிலிருந்த பொன், மணி முதலியவற்றின் தன்மை அறிபவர்களாக இருந்திருக்க வேண்டும். கி. பி. 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அரச்சலூர்க் கல்வெட்டு 'மணிய்வண்ணக்கன்' என்று குறிப்பிடுவது இதன் தொடர்பாகவே இருக்க வேண்டும்.[9] தமிழ்ப்பேரகராதி வண்ணக்கன் என்ற சொல்லுக்குப் பொருள் தரும்போது, 'வண்ணக்கர் காணத்தை நீலமென்றலும்' (தொல். சொல். 16 சேனா) என்ற

அடியை மேற்கோளாகக் காட்டுகிறது.[10] காணம் என்பது குண்டு மணி அல்லது 'கொள்ளு' உருவ அமைப்புடைய சிறுசிறு துண்டுகளாக உள்ள பொன். இது காசாக பெருவழக்கில் இருந்தது. நீலம் என்பது நீலக்கல். வண்ணக்கர்கள் மணியையும், பொன்னையும் தரம் மதிப்பிட்டு அறிபவர்கள் என்பதும், அவர்கள் மதிப்பீடு, பொது அளவில் ஏற்றுக்கொள்ளக் கூடியது என்பதும், அவர்கள் தவறுதலாக மதிப்பீடு செய்யலாகாது என்பதும் இம்மேற்கோள் வரியால் அறியக் கிடைக்கின்றன.

'வண்ணக்கன் விளாகம்',[11] 'வண்ணக்கன் கொல்லை'[12] என்ற கல்வெட்டுச் சொற்றொடர்கள் அவர்களுக்கு ஊர்ப்பொது நிலங்கள் வழங்கப்பட்டிருந்தமையைக் காட்டுகின்றன. வண்ணக்கன் ஒருவன் கரணத்தானாகப் (கணக்கன்) பணிபுரிந்தமை 'வண்ணக்கரணத் தான்'[13] என்ற கல்டெட்டுச் சொற்றொடரால் அறியக் கிடைக்கிறது. வண்ணக்கர்கள் காசு, உலோகம், மணி ஆகியவை சோதிக்கும் திறன் உடையவர்களாகவும் கூடுதலாகக் கணக்கறிவும், எழுத்தறிவும் உடையவர்களாகவும் விளங்கியதையே இது காட்டுகிறது. இக் கட்டுரைத் தொடக்கத்தில் பார்த்த வண்ணக்கர்கள் சங்க காலப் புலவர்களாக இருந்தமையும், மொழி, எழுத்தறிவில் சிறப்பு உடைய வர்கள் என்பதையே காட்டுகிறது. அரச்சலூர் இசைக் கல்வெட்டைத் தொகுத்த (எழுத்துப் புணருத்தான்) தேவன் சாத்தனும் வண்ணக்கனே. இவன் மணிய் வண்ணக்கனாக இருந்ததோடு கூடுத லாக இசை அறிவும், அந்த அறிவை எழுத்தில் நிறுத்தும் திறனும் உடையவனாகச் சிறந்து விளங்கியிருக்கின்றான். வண்ணக்கர்களைக் கோயிலுக்குக் கொடை கொடுத்தவர்களாகவும் கல்வெட்டுகள் காட்டுகின்றன.[14] வடம வண்ணக்கனும், மணிய் வண்ணக்கனும். 'சாத்தன்' என்று பெயர் பெற்றிருப்பது இவர்கள் வணிகர் குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை உணர்த்தும். புதுக்கயத்து வண்ணக்கன். 'கிழான்' என்று குறிக்கப்படுவது விவசாயக் குடித் தொடர்பை உணர்த்தும். இச்செய்திகள் வண்ணக்கர்கள் சமுதாயத்தில் வகித்த நிலையைக் காட்டுகின்றன.

பொருளியலின் முக்கியக்கூறு செலாவணியாகும். அந்தச் செலா வணியுடன் நெருங்கியத் தொடர்புடையவர்களாக வண்ணக்கர்கள் விளங்கியமை அவர்களுடைய சிறப்பு நிலையைக் காட்டுகிறது எனலாம்.

1. புறம் : 125, 172, 198; குறுந் : 81, 83, 159, 314, 316; நற் : 257, 294, 298, 299 ஆகிய பாடல்களைப் பாடிய புலவர்கள்.
2. கல்வெட்டியல், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை 1972.
3. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி 12, எண். 179, இன்னும் பல கல்வெட்டுகள்.
4. தெ. க. தொகுதி 8 எண். 178
5. Tamil Coins A Study - Dr. R. Nagaswamy 1981, P. 114
6. தெ. க. தொகுதி 5 எண். 603
7. மேலது
8. 'துளைப் பொன்', சு. இராசகோபால், 4வது தமிழக நாணய இயல் மாநாடு, சென்னை 1990ல் படித்த கட்டுரை.
9. மேலது
10. Tamil Lexicon Vol. VI 'காசு என்பதற்கு மணி, பொன் என்ற பொருள்களும் உண்டு.
11. தெ. க. தொகுதி 12 எண். 58
12. தெ. க. தொகுதி 8 எண். 739
13. தெ. க. தொகுதி 5 எண். 518
14. தெ. க. தொகுதி 7/977, 8/35, புதுக்கோட்டைக் கல்வெட்டுத் தொகுதி எண். 351.


---

குறிப்பு

சங்க காலத்து மணிக்கற்கள் பெருமளவில் ஏற்றுமதி செய்யப் பட்டன. அவற்றின் நிறம் கண்டு நிர்ணயித்தல் முதன்மையான நுணுக்கமான பணியாகும். வண்ணங்காணும் புலமுடையார் வண்ணக்சர் எனப்பட்டனர் போலும். இக்கற்கள் பெருமளவில் கொங்கு நாட்டில் கிடைத்தமையால் அதில் தேர்ந்தோர் பலராகி குல மரபாய் வண்ணக்கர் கூட்டம் (Clans) என்ற தொல் குடிப் பிரிவு கொங்கு நாட்டில் இருக்கிறது. கால, ஆட்சி, தொழில் மாற்றங்களால் பல்வேறு தொழில் புரிவோராய் கிளைத்துள்ளனர்.

— பதிப்பாசிரியர்.

# A Coin of Sundara Pandya

**A. Padmavathy,** M.A.,
Epigraphist.

There are many Tamil coins found bearing the legend 'Sundara Pandya'. While listing these coins, Desikachari has stated that, "the legend Sundara Pandya occurs in such a large number and variety of coins that it is hopeless to identifying them with the reign of any particular monarch, though it may be fairly assumed that issues of Sundara Pandya bearing the fish mark were anterior to the period when Lankapura Dandanada according to Mahavan so ordered that the Kahapana of Parakramabahu should be current in the Pandyan kingdom".[1]

The coin under study in the present article is listed in Elliots Book No: 148 and in Desikachari fig 55. This coin bears on the *obverse* a boar facing to right under sun and moon. On the *reverse* the legend 'Sundara Pandya' is seen two fishes, and sceptre between the fishes. Elliot has not mentioned any particular point about this coin. He simply says that, "this belongs to what has been called the Chola-Chalukya period in which the relation between the Pandya and Chola have not been clearly ascertained"

Desikachari states about this particular coin in his 'South Indian Coins' that the Pandyan coins with the boar obverse have always the legend 'Sundara' on their reverse; there is no clue where by we can attribute them to any particular reign.

The boar emblem was probably assumed on an inter marriage between the Chalukyan and Pandya kings or on a conquest of the Chalukyan by the Pandyas.[2]

Vidya Prakash, in his 'Coinage of South India' agrees with the above view of Desikachari about this coin.

Now the questions stand before us are:

(1) Who was that Sundara Pandya?

(2) Because of bearing the boar in obverse whether this Sundara Pandya defeated the king whose emblem was boar, or accepted the supremacy of the emblem?

(3) This boar emblem should belong to either Chalukyas or Hoysalas or Vijayanagara kings.

(4) The script of the legend 'Sundara Pandya' belongs to which period?

Now, we should study which dynasty this boar of this coin does belong to?

The 10th, 11th century A D. Pandyas under the Chola rulers were not in a position to issue coins. There was no peaceful situation. The Pandyas were always revolting against the Cholas. The Cholas installed some one among their princes to rule the Pandyan country.

Like Pandyas the western chalukyas were also suppressed by the Cholas. So there was no question of issuing the coins by Pandyas allied with western Chalukyas under Chola rulers.

So we can conclude,

(1) The boar emblem did not belong to the Chalukyas.

(2) And the emblem did not belong to the Vijayanagara kings. They entered into Tamil country (Kumara Kampana) during 1372 A.D only.

(3) So this emblem should have belonged to the Hoysalar only

(4) The script of the coin may belong to the period 12th, 13th century A.D. only.

The Hoysalas appeared in the scene of the history of the Tamils around 1231 A.D. Now we will see the necessity for their appearance.[3]

Maravarman Sundara Pandya I who came to throne on 1216 A.D. not only captured their own country from the Cholas but the Chola country itself. when, the defeated Rajaraja flew

away, Kadava chief Kopperunjinga captured him at Tellaru, and imprisoned him in Ponnamaravathi.

With the request of Rajaraja, Hoysalas attacked and subdued the Kadava chief, released the Chola king Rajaraja and installed him in his Chola throne. This happened in 1231 A.D. After this event, the Hoysalas entered into the Chola and Pandya countries. They collected levies forcefully from the people of Pandyan country and gave troubles during 1235-36 A.D.[4]

But the Pandya king Maravarman Sundara Pandya I did not subdue Hoysalas and they were not also subdued. So there was no chance for the coin of Sundara Pandya bearing the boar belonging to him.

Then the history of Hoysalas of Tamil country came to end in 1262 A D. by a Pandya king who also had the name Sundara Pandya. He was Jatavarman Sundara Pandya I who ascended to the throne on 1250 A.D. His achievements were many. He defeated Cheras, Telugu chodas, Kakatiyas, Kadavas, the Ceylon king and the Chola king Rajendra, III and also having killed the Hoysala king Vira Someswara in 1262 A.D. he brought the history of Hoysala dynasty to end.

Now, We should see the position of the 'boar'. Thc boar facing right under the sun and moon, and also the sangu and chakra are found to each side of the boar. So this scene does not seem to be the subordinate position of the boar. But the same importance given to the legend Sundara Pandya, was given to the boar too. So this coin was not issued by the above Jatavarman Sundara Pandya I, who had the titles 'Ellam Talaiyaana Perumal' 'Ellaarkku Naayanaar' and 'Maharaajaadhiraaja Paramesvara'. He had had the titles because of his unlimited victories only.

So, between the two Sundara Pandyas, i.e. Maravarman Sundara Pandya I of 1216 A.D. and Jatavarman Sundara Pandya I of 1250 A.D. there might have been one Sundara Pandya, who had respect to the Hoysalas.

A record from Tirunelveli of Maravarman Sundara Pandya, refers to that, the king had constructed a new village, 'Posala Veera Somesvara Chaturvedi Mangalam' in the name of *Mamadi* Vira Someswara. It is dated 1248 A.D. He called the Hoysala king as his uncle.

Another record from Devipatnam[5] of Maravarman Sundara Pandya refers to a temple called 'Bhogiswaram' in the name of Hoysala general Bhogayya Dandanayaga. It isdated 1242 A D.

A record from Thirumayam[6] belonging to Maravarman Sundara Pandya dated 1245 A.D. refers to 'Ennaadu Udaiya Svastisri Pradaaba Chakravarthi Posala Veera Somesvara Devar'.

The same Maravarman Sundara Pandya remitted taxes at the request by his Mamadi Vira Someswara for the service expenditure called 'Posala Veera Samy Devan Sandhi'. One of the Madurai temple inscriptions also states that he granted tax free concession for a gifted land for the festival in the name of his Mamadi Vira Someswaran.

The sanskrit poem Rukmani Kalyana[7] states that Someswara married Bijjala, a Pandyan princess and their son Narasimha III married the daughter of a brother of Bijjala. The Hoysalas not only over powered the Pandyas but also had the matrimonial alliance with them. So this was the time for issuing the coin like this, bearing the boar with full respect. Maravarman Sundara Pandya II who had ruled from 1238 to 1255 A.D. might have issued this problematic coin.

---

1. Sir.T. Desikachari - *South Indian Coins*(1989) p. 160-161
2. Ibid p. 161
3. N.Sethuraman - *Hoysalas in Pandimandalam* (1984) p.7
4. Ibid p. 15
5. S.I.I. Vol. VIII, No. 404
6. ARE 587/1906;
   N. Sethuraman - *Hoysalas in Pandimandalam* p. 17
7. Ibid p. 17

# பச்சிபிலிபட்டக்காரர் செப்பேடு

**சொ. சாந்தலிங்கம்,** எம்.ஏ.,
தொல்பொருள் அலுவலர், மதுரை

இச்செப்பேடு ஓ.கோயில்பட்டிபச்சிபிலிபட்டத்து பட்டக்காரர் பெ. ரா. ம. நடராசன் செட்டியார் அவர்களிடம் உள்ளது. இவ்வூர் காமராசர் மாவட்டம் சாத்தூர் வட்டத்தில் சங்கரலிங்கபுரம் என்னும் பேரூர்க்கு அருகில் அமைந்துள்ள சிற்றூர் தொல்லியல் அலுவலரால் இச்செப்பேட்டின் நகல் (**Xerox**) எடுக்கப்பட்டு படிக்கப்பட்டது.

இப்பட்டயம் குறுக்குவசமாக இரண்டு இடங்களில் உடைந் துள்ளது. அதனைச் சரியாகப் பொருத்தி பின்புறம் புதிய தகடு கொடுத்து பாதுகாத்து வைத்திருக்கின்றனர். பட்டயத்தின் நீளம் 31 செ.மீ. அகலம் 21 செ.மீ. பட்டயத்தின் முன்புறம் முழுவதும் எழுதப்பட்டுள்ளது. பின்புறம் ஒன்பது வரிகளே எழுதப்பட்டு பட்டயம் முற்றுப் பெற்றுள்ளது. பட்டயத்தின் மேல்பகுதியின் இடப்புறம் சூரியனும், வலப்புறம் பிறைச் சந்திரனும் இடம் பெற்றுள்ளன.

பட்டயம் மதுரையை ஆண்ட திருமலை நாயக்கர் காலத்தைச் சேர்ந்தது. அவரது ஆண்டு தவறாகக் குறிக்கப்பட்டுள்ளது. சகம் 1513 (௲ரு௱௰௩)எனக் குறிக்கப்பட்டு தமிழ் வருசம் 'கற' என உள்ளது. சகம் 1513 அல்லது கி. பி. 1591 எனக் கொண்டால் திருமலை மன்னன் காலத்தைச் சார்ந்ததாக வராது. ஆனால் 'கற' என்னும் தமிழ் வருசத்தைக் கொண்டு திருமலை மன்னன் காலத்தில் கி.பி. 1651ல் வரும் கற வருசத்தைச் சார்ந்தது இப்பட்டயம் எனக் கொள்ளலாம்.

**பட்டையச் செய்தி**

தேவாங்கர் சமூகத்தாருக்குரியது இப்பட்டயம். இச்சமூகத் தார்க்கு முதனூறு, பெனுகொண்ட, படைவீடு, தாராபுரம் ஆகிய இடங்களில் தளம் (தலைமையகம்) அமைந்திருந்தது. இதில் தாரா

புரத்தை தலைமையிடமாகக் கொண்டு மதுரைப் பகுதியிலும் அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலும் வாழ்ந்த தேவாங்கர் சமூக மக்களுக்குச் மதுரைச் சொக்கநாதசுவாமி கோயிலோடு இருந்த பிணை இப்பட்டயம் கூறுகிறது.

இச்சமூகத்தினர் தங்களுக்குள் வரிவசூல் செய்து சொக்கநாதர் கோயிலுக்கு ஒரு கட்டளையை நிறைவேற்றி அதற்குரிய மரியாதையைப் பெற்றுள்ளனர் என்பதே பட்டயத்தில் உள்ள முக்கிய செய்தியாகும்.

## செப்பேட்டு வரிகள்

சவுண்டீ
சுபரி ரா
மலிங்க
ம் துணை

1. ஸ்ரீ றிசகற முதனூ ரு பிணைக் கொண்டபடைவீடு முத
2. லாந தாராபுரம் தாயிஷ்தழம் ஸ்ரீ மதுரைத் தழத்தில் பிறு
3. தீயிசுபறனாகிய வீரசிம்மாசனத்தில் யெளும் தருளிய மகா
4. றாய பிறுவிடைய தேய்வ மகாராயரா கண்டிய பிரதாபராயர்
5. மல்லிகாற்சுனராயர் அச்சுதராயர் நரசிங்க ராயர் ஆல
6. த்தராயர் கட்டாரி சாளுவ மகாராயர் சீறங்ராயர் ஸ்ரீ மகதேவ
7. ராயர் பிறிதிராச்சியம் பரிபாலினம் பண்ணியருழ நிற்காலத்தில்
8. ராயர் ராணுவத்துக்கு கறுத்தனாகிய விசுவநாத நாயக்கர் கிஷ்ட
9. ணப்ப நாயக்கர் வீரப்ப நாயக்கர் திருமலை நாயக்கர் யருளா

10. நின்ற காலத்தில் சாலியவாகன சகாற்தம் ஆண்டு சூநாகம க்கு

11. மேல் செல்லா நின்ற கறவரு ஆடி மீ 10 தேதி தாய நேரித் தல

12. த்தில் பெரியவர்கள் முன்பாகத் தண்டிய திம்மி செட்டியாறுக்கு கறமல்

13. லி செட்டிக்கும் சாதனப் பட்டயம் குடுத்தபடி தாயநேரி மல்லி செட்டி

14. யும் உம்மன பட்டி துப்பிலி சின்னமல்லி செட்டியும் அரசனப்பட்டி தி

15. ம்மி செட்டியும் பிள்ளையார் நத்தம் சங்காரப்பன் செட்டியும் வேழம்பூரு மு

16. த்தி செட்டியும் காரைக்கண்ணி கஞ்சலக்குண்டம் கணக்கன்செட்டி

17. யும் கருப்பூரு மல்லி செட்டியும் மீஞ்சிலத் திம்மி செட்டியும் வெம்பா

18. க்கோட்டை முத்திசெட்டியும் கப்பல் சவுண்[டு] செட்டியும கரிவண்ட......

19. ட்டியும் மதுரைத் தலத்திலுள்ள ராமன் பெத்தவாட செட்டியும் சு

20. ண்ட நத்தத்தில் யிட்டலப்பெத்த வாடன செட்டியும் திருமங்[க]லத்து சுரை

21. க்காயறகி செட்டியும் உள்ப்பட்ட சாதியாரெல்லாரும் குடிதண்டியா

22. த தம்மி செட்டியாயும் காரமல்லி செட்டியும் சாதிவரி தட்டி விச்சு

23. சொக்கநாத சுவாமி சன்னதியில் சசாதம் மூ வெட்டிப் பெட்டு வந்

24. ததுக்காக அதற்குச் சேற்று பெ[ா]ன் 12000. இந்த பெ[ா]ன் நில் சாதியார்

25. இருத்த பொன் 7000 தண்டிய திம்மிசெட்டியும் கார்மல்லி செட்டியும்

26. இருத்தது பொன் 5000 இதுவல்லாமல் தேசம் சாதி யாரில் அறுபது

27. கல்யாண முடங்கியிருந்த படியினாலே அதற்காக ஒடைப்பட்டி கா

28. றமல்லி செட்டி இருத்தது பொன் 400 ஆக சாதியாருக் காக பொன் 5400

29. இருத்தபடியாலே சாதியாரெல்லாருங் கூடி திம்மி செட்டியார் க

30. ாரமல்லி செட்டியாறுக்கும் பூறுவம் பெரியவர்கள் கட்டத்தடு கெ

31. ாட்டக்கோலுங் கட்டளையிட்டபடிக்கும் நாங்களும் யிருமுடியும் ஒ

32. றுமுடியாக கூடி யிறுமென்று கட்டளையிட்டோம் பூறுவம் பெ

33. ரியவர்கள் கட்டளைப் [பிரகாரம்] குற்ற சட்டமுங் கொண்டு பஞ்

34. சாட்சாரமும் பாக்கு வெற்றிலையும் கொண்டு முந்தின சந்[த]ணமும்

35. வாங்கிக் கொண்டு நடப்பாராகவும் யிதை யாதா மொறுத்தன்றாள

36. க்கோடு சொன்னால்வரிறுத்த பொன்னும் [இட்டு] அவர்களைய்

37. சாதிக்குப் பிறம்பாய் போட்டு சாதியாரெல்லாருமாகக்

38. கூடி வீடுவாசல் குளம் பூ வரப் பரித்து அவன் பெண்டுபி
39. ள்ளையும் அரமணை தகத் தள்ளிக் குடும்பாறாகவும் இந்த
40. ப்படிக்கிச் சம்மதித்து சாதனப்பட்டயம் குடுத்தோ
41. ம் கல்லுங் காவேரியும் புல்லும் பூமியும் சந்திராதித்தர் உள்
42. ளவரைக்கும் ஆண்டு அனுபவித்து வருவாராகவும் யித
43. ற்கு சொக்கனாத சுவாமித் துணை தப்பாது சவுண்டீசு
44. பரிபாதத்தானை ராமலிங்கர் பாதத்தானை தப்பாது
45. இதற்கு சாட்சி மேல்படியூறு அச்சுராக் கவுண்டன்
46. கணக்கராமக் கவுண்டன் சூரப்பக் கவுண்டன்
47. பாவலம் கவுலப நாயக்கர் வேழம்பூரு வாண்டத்
48. தேவன் இந்தப்படிக்கி எழுதினவன் தாயநேரி அல
49. ங்காரம் பிள்ளை கையி எழுத்து சவுண்டீசுபரி
50. ராமலிங்கம் துணை. இ....

---

## கொரட்டூர் கல்வெட்டு

சென்னைக்கருகில் உள்ள கொரட்டூரில் முதலாம் இராஜராஜ சோழனின் கல்வெட்டு ஒன்று அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டது. இக்கல்வெட்டு கொரட்டூரிலுள்ள அம்மன் கோயிலின் தூணில் உள்ளது. கல்வெட்டின் காலம் கி. பி. 997 ஆகும்.

இவ்வூரின் பழைய பெயர் குறட்டூர் என்பதே. இக்கல்வெட்டில் 'புழற்கோட்டத்து, அம்பத்தூர் நாட்டு குறட்டூரான ஸ்ரீ பராந்தகச் சதுர்வேதிமங்கலம்' என்று இவ்வூர் குறிக்கப்படுகிறது. இவ்வூரில் செம்பியன் மாதேவி ஈஸ்வரம் என்ற பெயரில் சிவன் கோயில் ஒன்று இருந்த செய்தியும் தெரிய வருகிறது. இக்கல்வெட்டு பற்றித் தகவல் தந்தவர் : ஆர். வசந்த கல்யாணி, கல்வெட்டாய்வாளர். ★

# சின்னத்தக்கை நடுகல்

**மா. கலைவாணன்,** எம்.ஏ.,
காப்பாட்சியர், தொல்பொருள் ஆய்வுத்துறை.

ஆர்க்காட்டின் அருகில் உள்ள கிராமங்களில் கலைப் பொருட்கள் சேகரிப்புப் பணிக்காக ஆய்வு மேற்கொண்டபோது சின்னத்தக்கை என்ற கிராமத்தில் கேள்விப்பட்ட ஒரு செவிவழிச் செய்தி இப்பகுதி வரலாற்றோடு தொடர்புடையதாக இருக்கிறது.

சின்னத்தக்கை என்னும் சிற்றூர் ஆர்க்காட்டிலிருந்து கண்ணமங்கலம் செல்லும் சாலையில் ஐந்தாவது கிலோ மீட்டரில் அமைந்துள்ளது. இவ்வூரின் வடக்குப்புறம் சுமார் 1/2 கி.மீ. தொலைவில் இவ்வூரின் இடுகாடு அமைந்துள்ளது. இந்த இடுகாட்டின் மையப் பகுதியில் ஒரு நடுகல் உள்ளது. இவ்வூரில் சேகரித்த செவிவழிச் செய்திகள் யாவும் அந்த நடுகல்லுடன் தொடர்புடையதே.

சின்னதக்கை ஊரைச் சுற்றிப் பழங்காலத்தில் மிகவும் அடர்ந்த காடுகள் இருந்தனவாம். அந்தக் காடுகளில் அப்பொழுது கொடிய காட்டு மிருகங்கள் வாழ்ந்து வந்திருக்கின்றன. அவற்றில் ஒரு புலி (கிராம மக்கள் வேங்கைப்புலி என்கின்றனர்) மக்களுக்கும் கால்நடைகளுக்கும் மிகவும் துன்பம் கொடுத்து வந்திருக்கின்றது. குறிப்பாக நிறைய குழந்தைகளைக் கொன்று சாப்பிட்டுவிட்டது. சின்னதக்கை மற்றும் அருகில் உள்ள ஊர் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு ஆர்க்காட்டிற்கு வந்து தங்கள் குறையை ஆர்க்காட்டு நவாபிடம் முறையிட்டனர். உடனே ஆர்க்காட்டு நவாபு மக்களின் குறையைத் தீர்க்க நடவடிக்கை எடுத்தார். அதாவது மக்களுக்குத் துன்பம் விளைவிக்கும் அப்புலியைக் கொல்பவருக்கு 1000 பொற்காசுகளும் ஓர் ஏரிப்பாசன அளவு நிலங்களும் பரிசாகத் தரப்படும் என தண்டோரா (பறை) மூலம் அறிவிக்கச் செய்தார். அதைக் கேட்ட வீரமிக்க இளைஞர்கள் பலர் அந்தக் கொடிய புலியைக் கொல்ல முயற்சி செய்து தோல்வி அடைந்தது மட்டுமின்றி பலர் இறந்தும் போயினர்.

இறுதியாக சின்னத்தக்கை கிராமத்தைச் சேர்ந்த குருநாதன், சிவநாதன் என்ற சகோதரர்கள் அந்தப் புலியைக் கொல்ல முன் வந்தனர். அவர்கள் காட்டு மிருகங்கள் நீர் அருந்த வரும் கன்னிக் குளம் என்ற குளத்தின் மேட்டில் பரண் அமைத்து அதில் இருந்து புலி நீர் அருந்த வரும்போது அதனைக் கொல்ல திட்டமிட்டுப் பரண்

மீது அமர்ந்து காத்திருந்தனர். புலியும் நீர் அருந்த வரவே புலியைப் பரண் மீது இருந்து முதலில் அண்ணனான குருநாதன் தாக்கி இருக்கின்றான். புலி தாக்குதலில் இருந்து தப்பித்துப் பரணைத் தாக்கியிருக்கிறது. முதலில் குருநாதனை அறையத் துவங்கியது. அவனும் புலியுடன் சண்டையிட்டுக் கொண்டே பரண்மீது இருந்து கீழே விழுந்து அதனுடன் கட்டிப் புரண்டிருக்கின்றான். சமயம் பார்த்து, பரண்மீதிருந்த சிவநாதன் கீழே குதித்துத் தான் போர்த்தியிருந்த கம்பளி ஆடையைச் சுருட்டி புலி தன்னை கடிக்காதவாறு அதன் வாயில் நுழைத்து அதனைக் குத்திக் கொன்று விட்டான். எனினும் அண்ணன் குருநாதன் அந்த இடத்திலேயே மரணம் அடைந்தான்.

இந்த செய்தியை அறிந்த ஆர்க்காட்டு நவாபு உயிருடன் இருந்த சிவநாதனை ஆர்க்காட்டிற்கு அழைத்து அவனைப் பாராட்டி, அறிவித்தபடி பரிசுகள் அனைத்தும் உனக்கே அளிக்கப்படும் என்று கூறினார். மேலும் உனக்கு என்ன வேண்டும் என்று கேட்க, சிவநாதன் தனக்கு ஏரிப்பாசன நிலமோ, 1000 பொற்காசுகளோ வேண்டாம் என்று கூறிவிட்டுத் தன்னுடைய வழி வந்தவர்களுக்குச் சரியான இடுகாடு இல்லை; அதனை வழங்கினால் போதும் என்று கேட்டானாம். நவாபும் மிக்க மகிழ்ச்சி அடைந்து குருநாதன் இறந்த இடத்திலேயே அவர்களுடைய வழிவந்தவர்களுக்கு ஒரு இடுகாட்டை மானியமாக அறிவித்தான். இன்றும் 66 சென்ட் பரப்பளவு உள்ள அந்த இடுகாடு குருநாதன், சிவநாதன் வம்சா வழியினரால் மட்டும் இடுகாடாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அவர்களைப் பாராட்டி ஆர்க்காட்டு நவாபு ஒரு துப்பாக்கி பரிசாக அளித்தாராம். அந்தத் துப்பாக்கி இன்றும் இவ்வூரில் உள்ள திரு.பொன்னுசாமி பாளையக்கார நாயக்கரின் உறவினர் வீட்டில் இருப்பது குறிப்பிடத்தக்கது. குருநாதன் இறந்த இடமே இடுகாடாக அறிவிக்கப்பட்டதுடன் அவ்விடத்திலேயே குருநாதனுக்கு ஒரு நடுகல்லும் எடுக்கப்பட்டுள்ளது. அந்த நடுகல்லே நாம் குறிப்பிட்டுள்ள சின்னத்தக்கை நடுகல்லாகும்.

இந்த நடுகல் 18-ஆம் நூற்றாண்டின் கலைப்பாணியில் சுமார் $4 \times 2{\cdot}5$ சதுர அடி அளவுள்ள கல்லில் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. அதன் வடிவமைப்பு தமிழகத்தின் ஏனைய இடங்களில் உள்ள புலிக்குத்திப்பட்டான் என்ற நடுகற்களின் அமைப்பில் அமைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நடுகல் கலைப்பாணியில் 17,18-ஆம் நூற்றாண்டை ஒத்திருப்பதாலும் அந்த நேரத்தில் ஆர்க்காட்டில் நவாபுகள் ஆட்சிசெய்தனர் என்று செவிவழிச் செய்தி குறிப்பிடுவதாலும், இச்செய்தி நடந்திருப்பதற்கான சான்றுகளுடன் கூடிய செய்தியாக நமக்கு கிடைக்கின்றது. அந்தப் புலி நீர் அருந்தியதாகச் சொல்லப்படும் கன்னிகுளமும் அந்த நடுகல்லுக்கு சில அடிகள் தூரத்தில் இன்றும் தூர்ந்த நிலையில் உள்ளது. அக்குளத்தின் அருகில் தொடர்ச்சியாகக் குன்றுகளும் அமைந்துள்ளன. ஆர்க்காட்டு நவாபுகள் பொருளாதார நெருக்கடியிலும் சண்டையிலும் கவனமாக இருந்த பொழுதும் தம் மக்களின் குறைகளை முடிந்த அளவு நிவர்த்தி செய்திருக்கின்றனர் என்பதை இதன் மூலம் நம்மால் அறிய முடிகிறது.

இந்தச் சம்பவம் குறிப்பாக எந்த நவாபின் காலத்தில் நிகழ்ந்தது என்று அறுதியிட்டுக் கூறமுடியாமலிருப்பது இச்செய்தியில் உள்ள ஒரு குறைபாடாக உள்ளது. எனினும் ஒரு சிறு பகுதியின் வரலாற்றைத் தெரிந்துகொள்ள இந்நடுகல்லும் அதனுடன் இணைந்த இச்செவிவழிச் செய்தியும் பெரிதும் துணை செய்கின்றன என்பதில் ஐயம் இல்லை.

---

# அரிய சிற்பம் கண்டுபிடிப்பு

தென்னார்க்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டத்தில் உள்ள ஆனாங்கூர் என்னும் கிராமத்தில் இருந்து தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் கி. பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த முருகன் (அல்லது) இந்திரன் என்று கருதப்படும் அரிய சிற்பம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த பல்லவ மன்னன் தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் காலந்தொட்டு ஆனாங்கூர் என்னும் இவ்வூர் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக இருந்தமை கல்வெட்டு மூலம் அறியப்படுகிறது. இதனைப் புலப்படுத்தும் கல்வெட்டு இவ்வூர் அருகில் உள்ள கால்வாய்க் கரையில் கண்டறியப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வூரின் வடமேற்குப் பகுதியில் அகஸ்தீஸ்வரர் கோயில் ஒன்று அமைந்துள்ளது. தற்போதைய கட்டட அமைப்பைக் கொண்டு ஆய்வு செய்கையில் இக்கோயில் முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் மீண்டும் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். ஏனெனில் இக்கோயில் கர்ப்பக் கிருகத்தின்

உட்புறச் சுவரில் முதலாம் குலோத்துங்கச் சோழனின் கல்வெட்டு காணப் பெறுவதாலாகும். கோயிலில் காணப்பெறும் கல்வெட்டுக்களில் இதுவே பழமையானதாகும். இக்கோயிலில் மேலும் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டு வரை உள்ள துண்டு கல்வெட்டுக்களும் சில இங்கு உள்ளன. இக்கிராமத்தில் கிடைத்துள்ள பல்லவர் காலக் கல்வெட்டில் இவ்வூர் தெய்வத்தின் பெயர், "மகாதேவர்" என்றும், ஊரின் பெயர் 'ஆனாங்கூர்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

முருகன் அல்லது இந்திரனாகக் கருதப்படும் இச்சிற்பம் கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த இறைவன் யானை மீது அமர்ந்து காட்சி தருவதாக உள்ளது. இத்தெய்வமும், அதன் வாகனமும் பலகைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. இறைவன் தலையில் அணிந்துள்ள மகுடம் ஜடாமகுடமாகும். வலது மேற் கையில் சக்தி ஆயுதமும், இடது மேற் கையில் அக்கமாலையும் உள்ளன. வலது கீழ்க்கை கீழே தொங்கிய நிலையிலும் இடது கீழ்க்கையைத் தொடை மீது வைத்தும் காணப்படுகிறது. கழுத்தணி தடித்தும், கைகளில் அணியும் கையணிகளும் இச்சிற்பத்தின் பழமையை உறுதி செய்கின்றன. யானையைப் பொருத்தமட்டில் அதன் முகப் பகுதியை மட்டும் காணமுடிகிறது. தந்தங்கள் குட்டையாகவும், காதுப்பகுதி மிக விரிந்தும் காணப்படுகின்றன.

யானை மீதமர்ந்து காணப்பெறும் முருகன் அல்லது இந்திரன் உருவம் பலகைக் கல்லில் பெரிதாக வடிக்கப்பட்டு காணப்படுவது இதுவே முதன் முறையாகும். மலையைக் குடைந்து செதுக்கப்பட்ட உருவம் ஒன்று மகாபலிபுரத்தின் அருகே உள்ள சாளுவன்குப்பம் பகுதியில் அமைந்து உள்ள புலிக்குகையின் முன்புறச் சுவரில் முன்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இத்துறை கல்வெட்டாய்வாளர் திரு.கோ. முத்துசாமி, இவ்வூரில் கல்வெட்டாய்வு மேற்கொண்டபோது மேற்குறிப்பிட்ட சிற்பங்களுடன் கி.பி. எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த எட்டுக் கைகளுடன் கூடிய இரண்டு துர்க்கைச் சிற்பங்களையும் ஒரு விஷ்ணு சிற்பத்தையும் கண்டுபிடித்துள்ளார். இச்சிற்பத்தின் நிழற்படத்தை முகப்பில் காணலாம்.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் அச்சகத்தில் அச்சிட்டு
இத்துறை இயக்குநருக்காக திரு. கு. தாமோதரன், துணை இயக்குநரால்
வெளியிடப்பெற்றது.